# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : 044-25358718, 9444058718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com

சுற்றறிக்கை எண்:104:2019 10.01.2019

அன்பார்ந்த தோழர்களே !

## மதுரை தெற்குப் பிராந்திய சிறப்புக்கூட்டம்

உங்கள் அனைவருக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும் சங்கத்தின் சார்பில் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். மாநாடுகளுக்கு இடையே, ஊழியர்களுக்கும் சங்கத்திற்குமான தொடர்பு என்பது சுற்றறிக்கைகள், தொலைபேசி உரையாடல்கள், நிர்வாகிகள் கிளைகளுக்குச் செல்லும்போது நடைபெறும் கூட்டங்கள் வாயிலாகவே நடைபெறுகிறது.

சமீபத்தில் சேர்ந்த தோழர்கள், பகுதிவாரியாக கூட்டங்கள் நடத்தினால், அதன் மூலம் ஊழியர்களின் உணர்வுகளை அறிந்துகொள்ளவும், சங்கத்தின் செயல்பாடுகளை உறுப்பினர்களுக்கு விளக்கவும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்ததன் அடிப்படையில், ஒவ்வொரு பிராந்தியத்திலும் இரண்டு, மூன்று கூட்டங்கள் நடத்த முடிவு செய்யப்பட்டு, அத்தகைய முதல் கூட்டம் வரும் ஜனவரி 6ஆம் நாள், வேலூரில் நடைபெற்றது. இரண்டாவது கூட்டம் ராஜபாளையத்தில் கீழ்க்கண்டபடி நடைபெறவுள்ளது:

இடம் : சேம்பர் ஆப் காமர்ஸ் கட்டிடம், 221, காமராஜர் நகர் முதல் தெரு, ராஜபாளையம்

(ராஜபாளையம் கிளை எதிரில்)

நாள் : 20.01.2019 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் : காலை 10 மணி

மதிய உணவு : மதியம் 1.30 மணி

மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் அவசியம் கலந்து கொண்டு, தங்கள் கருத்துக்களை தெரிவித்து, தலைவர்கள் கூறும் கருத்துக்களையும் கேட்டு, தேவையான விளக்கங்களையும் பெற்று இந்தக் கூட்டத்தை வெற்றி பெறச் செய்திட வேண்டுகிறோம்.

கூட்டம் காலை சரியாக 10 மணியளவில் துவங்க இருப்பதால், அனைத்து உறுப்பினர்களும், தவறாமல் குறித்த நேரத்திற்கு வந்து, கூட்டம் துவங்க உதவிட வேண்டுகிறோம். வெளியூரிலிருந்து வரும் தோழர்களுக்கு பேருந்துக் கட்டணம் வழங்கப்படும்.

மேலும் தகவல்கள் தேவைப்படும் தோழர்கள், கூட்டத்தின் அமைப்பாளர் தோழர்.S.முத்துக்குருபாக்கியம், ஆலோசகர் (தொலைபேசி எண்: 9789512797) அல்லது

தோழர்.G.முத்துவேல், செயற்குழு உறுப்பினர் (தொலைபேசி எண்: 9944042919) அவர்களை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்